நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு
NSW FEDERATION OF TAMIL SCHOOLS INC.

# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

# Dr Venthanar Ilango Memorial Tamil Proficiency Examination

11 June 2016

2016

தரம் : ஆரம்பப் பிரிவு (ஆண்டு 3, 4)
Level : Basic (Year 3 & 4)

வழங்கப்படும் நேரம் : 60 நிமிடங்கள்
Time Given : 60 Minutes

உங்களுக்குத் தரப்பட்ட விடைத்தாளில் பதில்களைத் தருக.

ஆசிரியரின் கவனத்திற்கு :
மாணவர்கள் தாமாகவே வாசித்து பதில் அளிக்க வேண்டும்.
(ஆசிரியர்கள் வாசிப்பில் உதவி செய்தலாகாது).

For questions 1 to 3, choose the word(s) that best describe the action shown in the picture.

**1 முதல் 3 வரையுள்ள வினாக்களுக்கு அருகில் உள்ள படத்தில் நடக்கும் செய்கையைச் சரியாகக் குறிக்கும் சொல்லைத் (சொற்களைத்) தெரிவு செய்க.**

1. குதிரை வேகமாக ..................................................



   (a) பறக்கிறது
   (b) நீந்துகிறது
   (c) ஓடுகிறது
   (d) ஆடுகிறது

2. சிறுமி .............................................. ஆடுகிறாள்.



   (a) ஏணி
   (b) ஊஞ்சல்
   (c) விளையாட்டு
   (d) நின்று

3. மயில் தோகை விரித்து ..................................................

   (a) பாடுகிறது
   (b) நடக்கிறது
   (c) ஆடுகிறது
   (d) ஓடுகிறது



Read and understand the given poem and answer the questions 4 to 6.

**கீழே தரப்பட்ட பாடலை வாசித்து அதிலிருந்து 4 முதல் 6 வரையான வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

நிலா நிலா ஓடி வா
நில்லாமல் ஓடி வா
மலை மேலே ஏறி வா
மல்லிகைப்பூ கொண்டு வா
பட்டம் போலப் பறந்து வா
பம்பரம் போல சுற்றி வா



4. இப்பாடலில் எதைப்பற்றி பாடப்பட்டுள்ளது?
   (a) மலை
   (b) நிலா
   (c) பட்டம்
   (d) பம்பரம்

5. நிலா என்ற சொல்லிற்கு ஒத்த கருத்துள்ள சொல் எது?
   (a) சூரியன்
   (b) காலை
   (c) சந்திரன்
   (d) நட்சத்திரம்

6. பாடலை எழுதியவர் (கவிஞர்) நிலாவிடம் என்ன கொண்டு வரச் சொல்கிறார்?
   (a) பட்டம்
   (b) பம்பரம்
   (c) மலை
   (d) மல்லிகைப்பூ

For questions 7 to 9, give the opposites to the underlined word.

**7 முதல் 9 வரையுள்ள வினாக்களில் கோடிட்ட சொல்லிற்கு எதிர் கருத்துள்ள சொல்லை தெரிவு செய்க.**

7. இளமையிற் கல்வி சிலையில் எழுத்து.
   (a) முதுமை
   (b) புதுமை
   (c) சிறுமை
   (d) பதுமை

8. போட்டியில் ஆமை <u>**வெற்றி**</u> அடைந்தது.

(a) இலாபம்
(b) தோல்வி
(c) ஜெயம்
(d) சித்தி

9. குமரனும் கண்ணனும் <u>**பகைவர்கள்**</u>.

(a) நண்பர்கள்
(b) துரோகிகள்
(c) உறவினர்கள்
(d) எதிரிகள்

For questions 10 to 12, choose the word that has the closest meaning to the underlined word.

**10 முதல் 12 வரையுள்ள வினாக்களில் கோடிட்ட சொல்லிற்கு <u>ஒத்த கருத்துள்ள</u> சொல்லை தெரிவு செய்க.**

10. தாத்தாவின் வருகையால் வாணி <u>**மகிழ்ச்சியில்**</u> குதித்தாள்.

(a) கவலையில்
(b) துக்கத்தில்
(c) சந்தோசத்தில்
(d) சிரிப்பில்

11. அம்மா குழந்தையை <u>**அணைத்து**</u> முத்தமிட்டாள்.

(a) தள்ளி
(b) தடவி
(c) தூக்கி
(d) கட்டிப்பிடித்து

12. ராணிக்கு பரத நாட்டியத்தில் மிகுந்த <u>**பிரியம்**</u> உண்டு.

(a) சுலபம்
(b) கடினம்
(c) விருப்பம்
(d) பிடிக்காது

For questions 13 to 17, choose the word to complete the sentence.

**13 முதல் 17 வரையுள்ள வினாக்களுக்கு <u>பொருத்தமான சொல்லை</u>க் கொண்டு வசனத்தை பூர்த்தி செய்க.**

13. நேற்று கண்ணனும் வாணியும் வானொலி ____________________.

(a) கேட்டார்கள்
(b) கேட்பார்கள்
(c) கேட்டுக் கொண்டிருக்கிறார்கள்
(d) கேட்கிறார்கள்

14. என்னிடம் குடை இருந்ததால் நான் மழையில் ____________________.

(a) நனைந்து விட்டேன்
(b) நனையவில்லை
(c) நனையக்கூடாது
(d) நனைய வேண்டும்

15. வெளியில் இருந்து வந்த சத்தத்தால் கண்ணன் சொல்வது ராணிக்கு ____________________.

(a) கேட்டது
(b) கேட்கவில்லை
(c) கேட்பேன்
(d) கேட்கவேண்டும்

16. அவன் கேட்ட கேள்விக்கு நான் விடை ____________________.

(a) அளித்தேன்
(b) அளித்தோம்
(c) அழித்தேன்
(d) அலித்தேன்

17. அண்மையில் வாணி தனது குடும்பத்தினருடன் கன்பராவுக்குச் ____________________.

(a) சென்றான்
(b) சென்றன
(c) சென்றாள்
(d) சென்றார்கள்

For questions 18 and 19, choose the word that is spelt incorrectly in the given sentence.

**18 முதல் 19 வரையுள்ள வினாக்களுக்கு தரப்பட்ட வசனத்தில் <u>எழுத்துப் பிழையான சொல்லைத்</u> தெரிவு செய்க.**

18. வாலைமரம் ஒரு முறைதான் குலை தள்ளும்.

(a) வாலைமரம்
(b) ஒரு
(c) முறைதான்
(d) குலை தள்ளும்

19. எனக்கு கால் வளிக்கிறது, என்றாலும் என்னால் வேகமாக ஓட முடியும்.

(a) கால்
(b) வளிக்கிறது
(c) என்னால்
(d) வேகமாக

For questions 20 and 21, choose the correct spelling of the underlined word that is spelt incorrectly in the given sentence.

**20 முதல் 21 வரையுள்ள வினாக்களுக்கு தரப்பட்ட வசனத்தில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள சொல் பிழையாக எழுதப்பட்டுள்ளது. அதற்குரிய சரியான சொல் எது?**

20. பேச்சுப் போட்டி தமிழ்ப் படசாலையில் நேற்று நடைபெற்றது.
   (a) படசாளையில்
   (b) பாடசாளையில்
   (c) பாடசாலையில்
   (d) பாடசாழையில்

21. தாத்தாவின் கலங்கிய கண்களில் இருந்து கண்ணீர் வலிந்தது.
   (a) வளிந்தது
   (b) வழிந்தது
   (c) வாளிந்தது
   (d) விழிநத்தது

Read and understand the text "வீடு வரைதல்" and answer the questions 22 – 24.

**"வீடு வரைதல்" பற்றிய குறிப்புகளை வாசித்துக் கொண்டு 22 முதல் 24 வரையுள்ள வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

## வீடு வரைதல்



தேவையான பொருட்கள்:
1. காகிதம்
2. பச்சை, மஞ்சள், கறுப்பு நிற பென்சில்கள்
3. வரையும் பென்சில்

வழிமுறை (Instructions) :
1. இரண்டு கோடுகள் வரைக.
2. இரண்டு கோடுகளையும் இன்னொரு கோட்டால் ஒன்றுசேர்க்க.
3. வீட்டின் கூரையை ஒரு முக்கோணமாக வரைந்து இரண்டு ஜன்னல்களும் ஒரு கதவும் வரைக.
4. வீட்டின் கூரையை மஞ்சள் நிறத்தால் தீட்டுக.
5. வீட்டின் இரு பக்கங்களிலும் ஒவ்வொரு மரத்தைக் கீறி இலைகளுக்கு பச்சை நிறம் தீட்டுக.

22. வீட்டின் கூரையின் வடிவம் என்ன?
   (a) சதுரம்
   (b) வட்டம்
   (c) நீள்சதுரம்
   (d) முக்கோணம்

23. வீட்டின் கூரையின் நிறம் என்ன?

(a) பச்சை

(b) மஞ்சள்

(c) கறுப்பு

(d) சிவப்பு

24. வீட்டின் அருகில் எத்தனை மரங்கள் வரையப்பட்டுள்ளன?

(a) இரண்டு

(b) ஒன்று

(c) ஒரு

(d) நாலு

Read “திருக்குறள்” and answer questions 25 – 27.

**“திருக்குறள்” என்பதை வாசித்து 25 முதல் 27 வரையுள்ள வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

### “திருக்குறள்”

தமிழில் உள்ள அரிய நூல்களுள் திருக்குறளும் ஒன்றாகும். திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர். இவர் பலநூறு ஆண்டுகளுக்கு முன் இந்தியாவில் வாழ்ந்த தமிழ்ப்புலவர். திருக்குறளில் நூற்றி முப்பத்தி மூன்று அதிகாரங்கள் உண்டு. திருக்குறள் அனைவருக்கும் ஏற்ற பல நல்ல கருத்துக்களைக் கூறுகிறது.

25. திருக்குறளை இயற்றியவர் யார்?

(a) திருவள்ளுவர்

(b) தமிழ்ப்புலவர்

(c) பாரதியார்

(d) திருக்குறள்

26. திருக்குறள் எத்தனை அதிகாரங்களைக் கொண்டது?

(a) 100

(b) 133

(c) 3

(d) 30

27. திருவள்ளுவர் எத்தனை ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த தமிழ்ப்புலவர்?

(a) நூறு ஆண்டுகள்

(b) பத்து ஆண்டுகள்

(c) பல நூறு ஆண்டுகள்

(d) நூற்றி முப்பத்தி மூன்று ஆண்டுகள்

For questions 28 – 30, choose the word that has the similar meaning to the underlined word.

**28 முதல் 30 வரையுள்ள வினாக்களில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள சொல்லிற்கு அதே பொருள் தரும் சொல்லைத் தருக.**

28. **சூரியன்** காலையில் உதிக்கும்
    - (a) வானம்
    - (b) ஆகாயம்
    - (c) கதிரவன்
    - (d) சந்திரன்

29. இரவு எட்டு மணி அளவில், அப்பா **வீடு** திரும்பினார்
    - (a) ஆலயம்
    - (b) கோவில்
    - (c) இல்லம்
    - (d) பாடசாலை

30. அன்னையும் **பிதாவும்** முன்னறி தெய்வம்.
    - (a) அம்மா
    - (b) தாய்
    - (c) அப்பா
    - (d) அண்ணா

For questions 31 – 33, choose the best word for each space.

**31 முதல் 33 வரையுள்ள வினாக்களுக்கு ஒவ்வொரு இடைவெளிக்கும் மிகவும் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.**

31. சனி, ஞாயிறு, திங்கள், செவ்வாய் என்பன ____________________.
    - (a) மாதங்கள்
    - (b) வருடங்கள்
    - (c) நாட்கள்
    - (d) விரதங்கள்

32. காகம் கரையும் அது போல குயில் ____________________.
    - (a) அலறும்
    - (b) குரைக்கும்
    - (c) கூவும்
    - (d) கதறும்

33. கிழக்கில் சூரியன் ____________________.
    - (a) மின்னும்
    - (b) மறையும்
    - (c) மங்கும்
    - (d) உதிக்கும்

For questions 34, choose the response that combines the sentence in the best way.

**34. கீழே தரப்பட்ட வசனங்களை சரியான ஒழுங்கில் அமைத்துக் காட்டுக.**

(1) காலை உணவு சாப்பிட்டாள்

(2) நித்திரை (தூக்கம்) விட்டு எழும்பினாள்

(3) காலைக் கடன்களை முடித்தாள்

(4) பாடசாலைக்குச் சென்றாள்

(a) (3), (4), (2), (1)

(b) (2), (3), (1), (4)

(c) (4), (2), (1), (3)

(d) (3), (1), (4), (2)

Write the meaning to the question 35.

**35. "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்". இதன் கருத்து?**

(a) அன்னையும் பிதாவும் நல்லவர்கள்

(b) அன்னையும் பிதாவும் நமக்கு வழிகாட்டும் தெய்வங்கள்

(c) நாம் தெய்வத்தை வணங்க வேண்டும்

(d) அன்னையும் பிதாவும் கோவிலுக்குச் சென்றார்கள்

நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு

NSW FEDERATION OF TAMIL SCHOOLS INC.

# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

# Dr Venthanar Ilango Memorial Tamil Proficiency Examination

2016